**<u>நீர்வளத்துறை</u>**

**<u>அனுப்புநர்</u>**
**பொறி.க.அருள் அழகன்,பி.இ.**
செயற்பொறியாளர்,நீவது.,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் – 638 451.

**<u>பெறுநர்</u>**
திருமதி. லீலாவதி ஆல்வின்,
எண்.11A, LIOYDS Avenue,
போத்தனூர் மெயின் ரோடு,
குறிச்சி,
கோயம்புத்தூர் – 641 023

---

**கடித எண்.வப / இவஅ.2 / கோ.73 / 363ம் /2023 / நாள். 11-05-2023**

---

அய்யா,

**பொருள்** மனைப்பிரிவு – கோயம்புத்தூர் மாவட்டம் - மதுக்கரை வட்டம் – வெள்ளலூர் கிராமம் – திருமதி. லீலாவதி ஆல்வின் என்பவருக்கு பாத்தியப்பட்ட புல எண்.837/1,3 மற்றும் 838/1,2-ல் 8.67 ஏக்கர் பூமியினை விவசாய பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றுதல் – நொய்யல் ஆறு மற்றும் வெள்ளலூர் வழங்கு வாய்க்காலினை பொருத்து நீர்வளத்துறையின் தடையின்மைச்சான்று வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை**
1) திருமதி. லீலாவதி ஆல்வின், எண்.11A, LIOYDS Avenue, போத்தனூர் மெயின் ரோடு, குறிச்சி, கோயம்புத்தூர் – 641 023 அவர்களின் விண்ணப்ப நாள்.21.04.2023.
2) உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.கோ.58 / 2023 / நாள்.27.04.2023.

********

பார்வை 1-ல் காணும் தங்களது கோரிக்கையின்படியும் பார்வை 2-ல் காணும் உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூர் கிராமத்தில் தங்களுக்கு பாத்தியப்பட்ட புல எண்.837/1,3 மற்றும் 838/1,2-ல் 8.74 1/2 ஏக்கர் விவசாய பூமியை குடியிருப்பு பகுதியாக நில பயன் மாற்றம் செய்வதற்கு நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.4367 / 2019-BA2 நாள்.13.03.2019-ன் படி நொய்யல் ஆற்றின் வெளிப்புற எல்லையிலிருந்து தங்களது புல எண்.837/1-ல் உள்ள பூமியிடத்தில் 15மீ மற்றும் 837/2 அரசு புறம்போக்கு வாய்க்காலின் கிழக்கு மற்றும் மேற்குபுற எல்லையிலிருந்து புல எண்.837/1 மற்றும் 837/3-ல் உள்ள பூமியிடத்தில் 3.00 மீ மற்றும் புல எண்.847-ல் உள்ள வெள்ளலூர் குளத்தின் வழங்கு வாய்க்கால் மற்றும் அணுகுசாலைகளின் வடபுற எல்லையிலிருந்து தங்களின் புல எண்.838/1 மற்றும் 838/2ல் உள்ள பூமியிடத்தில் 3.00 மீ தூரத்திற்குள் (Set back) எவ்வித கட்டுமானங்களும் மேற்கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையுடனும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் நீர்வளத்துறையின் தடையின்மைச்சான்று வழங்கப்படுகிறது. மேலும், வெள்ளலூர் வாய்க்காலின் குறுக்கே அணுகுபாலம் அமைக்கும் கருத்துரு நில உபயோக மாற்றம் செய்த பின் மனைப்பிரிவு அனுமதி பெறும் சமயத்தில் அணுகுபாலம் அமைப்பதற்கு தாங்கள் விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளலாம் எனவும் இதன் மூலம் கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1) வழங்கப்பட்ட இத்தடையின்மைச்சான்று தற்காலிகமானதேயாகும். கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூர் கிராமம் புல எண்.837/1,3 மற்றும் 838/1,2-ல்

உள்ள பூமிகளை மட்டுமே குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்ய வேண்டும்.

2) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூர் கிராமம் புல எண்.837/1,3 மற்றும் 838/1,2-ல் 8.74 1/2 ஏக்கர் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அருகில் உள்ள நொய்யல் ஆறு மற்றும் வெள்ளலூர் வழங்கு வாய்க்காலில் சேராதவாறு கழிவுநீர் வாய்க்கால் மற்றும் சுத்திகரிப்பு அமைப்புகள் தங்களின் பூமிகளின் எல்லைக்குள் அமைக்கப்பட வேண்டும். கழிவுப்பொருட்களை நொய்யல் ஆறு மற்றும் வெள்ளலூர் வழங்கு வாய்க்காலில் கொட்டி நீரோட்டத்திற்கு தடை ஏற்படுத்தக்கூடாது.

3) மேற்படி நொய்யல் ஆறு, வெள்ளலூர் வழங்கு வாய்க்கால் மற்றும் அதற்கு அருகாமையில் ஆக்கிரமிப்புகள் செய்வதோ மற்றும் பாதை அமைக்கவோ கூடாது.

4) நொய்யல் ஆறு மற்றும் வெள்ளலூர் வாய்க்காலில் நீரோட்டத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் எவ்வித கட்டுமான பணிகளும் மேற்கொள்ளக்கூடாது.

5) இயற்கை இன்னல்களால் மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்படும் இடர்பாடுகளுக்கு இத்துறை பொறுப்பேற்காது.

6) தங்களால் அனுமதி பெற சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானது என பின்னர் தெரிய வருமாயின், வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படுவதுடன், தகுந்த குற்றவியல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படும். இவ்வனுமதி ஆணையை நீர்வளத்துறை அலுவலர்கள் கேட்கும்போது காண்பிக்கப்பட வேண்டும்.

7) மேற்படி பூமியில் மனைபிரிவு அமைக்க உள்ளூர் திட்டக்குழுமம் அனுமதி வழங்க மட்டுமே இத்தடையின்மைச்சான்று வழங்கப்படுகிறது. இத்தடையின்மைச்சான்றை விவசாய பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றும் தடையின்மைச்சான்று என கருதக் கூடாது.

8) தாங்கள் மேற்கண்ட 7 (ஏழு) நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாக ரூ.100/- மதிப்புள்ள பதிவுத்துறை முத்திரைத்தாளில் உறுதிமொழி எழுதி கையொப்பமிட்டு இருநபர்கள் சாட்சி கையொப்பமுடன் இத்துறைக்கு உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம்,கோயம்புத்தூர் அவர்கள் மூலம் வழங்கிட வேண்டும்

11/5/23

செயற்பொறியாளர்,நீவது,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் - 638 451.

11/5/23